Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மெட்ராஸ்

ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மாவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, நவம்பர் 25, 2023 | இதழ் 134

## “5500 கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் இடங்கள், சொத்துகளைக் கழக அரசு மீட்டிருக்கிறது. இதற்காகப் பாராட்ட வேண்டும்!

## பக்தி இல்லாத - பகல் வேஷம் போடுவோர்தான் திராவிட மாடல் ஆட்சியை வீழ்த்தக் கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார்கள்.”

### தி மு க தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, 25 நவம்பர் *2023:* தி மு க தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருமங்கலம் கோபால் இல்லத் திருமண விழாவில் ஆற்றிய உரை:

திருமங்கலம் கோபால் - சரோஜினி தம்பதியருடைய அருமை மகன் கோ.ராஜ்குமார் அவர்களுக்கும், திரு. சாகுல் அமீது - வகிலாபானு இணையருடைய அருமை மகள் சா.சஜீ அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், நான் தொடர்ந்து ஒவ்வொரு திருமண விழாக்களிலும் எடுத்துச் சொல்லக்கூடிய செய்தி அதுவும் சீர்திருத்த முறையில், சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணமாக இருந்தால், அந்தத் திருமணத்தில் நிச்சயமாக நான் எடுத்துச் சொல்வதுண்டு. இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்கள், சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணங்கள், 1967-க்கு முன்பு நடைபெறும் என்று சொன்னால், அந்தத் திருமணங்கள் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தோடு நடைபெறமுடியாத ஒரு சூழ்நிலை. ஆனால், 1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு, கழகம் முதன்முதலில் அரசு பொறுப்பேற்ற பிறகு, முதன்முதலில் சட்டமன்றத்தில் முதலமைச்சராக நுழைந்த அண்ணா அவர்கள் சீர்திருத்த திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்கிற அங்கீகாரத்தை நமக்கெல்லாம் பெற்றுத் தந்தார்கள். ஆகவே, இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்தச் சீர்திருத்தத் திருமணம் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்கிற அங்கீகாரத்தோடு நடந்தேறியிருக்கிறது. இது சீர்திருத்தத் திருமணம் மட்டுமல்ல, சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணம் மட்டுமல்ல, இது ஒரு கலப்புத் திருமணம். அது மட்டுமல்ல, இது காதல் திருமணமாகத்தான் இருக்கும் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். அந்த வகையில், நடைபெற்றிருக்கக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சியில், நானும், நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளராக இருக்கக்கூடிய அண்ணன் துரைமுருகன் அவர்களும், பொருளாளர் திரு.பாலு அவர்களும், அதேபோல கழக முன்னோடிகள் எல்லாம் பங்கேற்று வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பாதுகாவலராக அவருடன் சென்று எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும், கழக நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, தலைவரை நிழல்போல் தொடரக்கூடிய ஒரு பாதுகாவலராக விளங்கியவர் நம்முடைய அன்பிற்குரிய சகோதரர் திருமங்கலம் கோபால் அவர்கள். அதுபோல், எப்படி பாதுகாவலராக கோபால் இருந்தாரோ, தலைவர் உடல்நலத்தைப் பாதுகாப்பதற்கு டாக்டராக கோபால்தான் இருந்தார். இரண்டு கோபால்தான் தலைவரோடு நெருங்கி அருகில் தலைவரைப் பாதுகாத்து வந்தார்கள் என்று எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

தலைவர் கலைஞருடைய கண் அசைவில் அவர் எதைச் சொல்லுகிறார், எதைச் சொல்லப்போகிறார், என்ன உத்தரவிடுகிறார், எதை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார் என்று தலைவர் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதல்ல, அவருடைய கண் அசைவிலேயே தெரிந்துகொண்டு அதை நிறைவேற்றும் ஆற்றலைப் பெற்றவர் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்கள்.

நான் மயிலைப் பகுதியில் கபாலீசுவரர் கற்பகம்பாள் திருமண மண்டபத்தில், இரண்டு திருமண நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு இந்த நிகழ்ச்சிக்கு வந்துகொண்டிருந்தபோது, நம்முடைய முதன்மைச் செயலாளர் திரு. நேரு அவர்கள் என்னுடன் வந்தார்கள். அவரிடத்தில், கோபாலை பற்றிக் காரில் சொல்லிக் கொண்டிருந்தேன். நான் சொன்னதை அப்படியே இங்கே பேசிவிட்டார். நேரு எப்போதும் ஸ்பீடு, எல்லோரும் சொல்வதைவிட அவர் சொல்லிவிட வேண்டும். பிறகுதான் தெரிந்துகொண்டேன். ஏன் இவரிடம் சொன்னேன் என்று நான் உணர்ந்தேன். அந்த அளவிற்கு ஆர்வத்தோடு அவரும் அதை எடுத்துச் சொன்னார். முதன்முதலாக, தலைவருக்கு அறிமுகம் ஆவதற்கு முன்பே எனக்கு கோபால் அவர்கள் அறிமுகம் ஆனார். 1970-71-ஆம் ஆண்டில் மதுரையில், இளைஞரணி துவக்கப்பட்ட நேரத்தில், அப்போது என்னுடன் இருந்து எனக்கு துணை நின்றவர் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் நம்முடைய கட்சியைவிட்டு பிரிந்து, ஒரு இடைத்தேர்தலை சந்தித்தோம். அப்போது ‘திண்டுக்கல் தீர்ப்பு’ என்ற பிரச்சார நாடகத்தில் நான் நடித்தேன். அந்த நாடகத்தை திருமங்கலத்தில் நடத்திக்கொண்டிருக்கிறோம். அதில் பல கலவரங்கள் ஏற்பட்டுவிடுகிறது. அதை அரசியலாக்க விரும்பவில்லை. அந்தக் கலவரம் ஏற்பட்ட நேரத்தில், எங்கிருந்து எப்படி வந்தார் யாரென்றே தெரியாது. கோபால் அவர்களை முன் பின் பார்த்ததுகூட கிடையாது. திருமங்கலத்தில் இருந்த கோபால் ஓடோடி மேடைக்கு வந்து என்னைப் பாதுகாத்து, அணைத்துக் காரில் என்னை ஏற்றிவிட்டு நான் தங்கியிருந்த இடத்திற்குப் பாதுகாப்பாக விட்டுச்சென்றார். அப்போதுதான் முதன்முதலாக அறிமுகம் ஆனவர். அதற்கு பிறகு என்னுடன் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அடிக்கடி சென்னைக்கு வருவார். வாசலிலேயே நிற்பார், உள்ளேகூட வரமாட்டார். கோபாலபுரம் வீடு உங்கள் எல்லோருக்கும் தெரியும். வாசலில் இருக்கக்கூடிய திண்ணை, திண்ணையை ஒட்டிய ஜன்னலுக்கு அருகே சண்முகநாதன் உட்கார்ந்துகொண்டு டைப் செய்து கொண்டிருப்பார். அந்த ஜன்னல் திறந்திருக்கும். கோபால் அங்கே நின்றுகொண்டு என்னோடு, நம்முடைய சண்முகநாதனோடு, அங்கிருக்கக்கூடிய உதவியாளர்களிடம் பேசிக் கொண்டிருப்பார். இப்படியே, பேசி, பேசி, பழகி, பழகி தலைவரிடத்தில் அவரை அறிமுகப் படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. அதற்குப் பிறகு தலைவரிடத்தில் அவரை அறிமுகப்படுத்தினேன். உடனே தலைவர் கேட்டார், ஆளைப்பார்த்தால் வாட்டஞ்சாட்டமாக இருக்கிறார், நமக்கு ஒரு பாதுகாப்புக்கு இவரை வைத்துக் கொள்ளலாமா? உடனே தலைவர் காலிலேயே விழுந்து, இது ஒன்று போதும், உங்களுக்குப் பாதுகாப்பாகக் கடைசி வரைக்கும் உயிர் போகின்ற வரைக்கும் நிச்சயமாக இருப்பேன் என்று சொன்னார். கடைசிவரைக்கும், உயிர்பிரிகிற வரைக்கும் தலைவரோடு இருந்தவர்தான் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்கள். அதைத்தான் நான் எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். கோபால் அவர்களுடைய துணைவியார் நன்றியுரை ஆற்றுகிறபோது, சில செய்திகள் எல்லாம் எடுத்துச் சொன்னார். கோபால் அவர்களின் திருமணத்தையும் தலைவர்தான் நடத்தி வைத்திருக்கிறார். அவர்களுடைய மூன்று பிள்ளைகளுக்கும் தலைவர்தான் திருமணத்தை நடத்தி வைத்திருக்கிறார். தற்போது, நான்காவது மகனுக்குத் திருமணத்தை நான் நடத்தி வைத்திருக்கிறேன். ஒருவேளை அடுத்தது, மகன்களுக்கு பிறக்கக்கூடிய பேரன், பேத்திகளுக்கும் நான்தான் திருமணத்தை நடத்தி வைப்பேன் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கிறது. அந்த அளவிற்கு நாங்கள் உரிமையைப் பெற்றவர்கள். அந்த அளவிற்கு எங்கள் மீதும், கழகத்தின் மீதும் ஈடுபாடு கொண்டவர்கள் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்களுடைய குடும்பம் என்பது எல்லோரும் நன்றாக அறிவீர்கள். கட்சிக்காக உழைத்து, கட்சிக்காகப் பாடுபட்டுத் பணியாற்றி, தொண்டாற்றி, பல தியாகங்களைச் செய்து எப்போதும் ஒரு மிடுக்காகத்தான் இருப்பார். அந்த மிடுக்குதான் இப்போதும் இந்த கழகத்தை வாழவைத்துக் கொண்டிருப்பதை யாரும் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது. முதன்முதலில், இளைஞர் அணி என்ற அமைப்பை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு துணை அமைப்பாக உருவாக்க வேண்டுமென்று தலைமைக் கழகம், தலைவர் கலைஞரும், நம்முடைய பேராசிரியர் அவர்கள் முடிவு செய்து, அதற்குப் பிறகு அதைத் துவக்கினார்கள். அது தொடங்கிய காலத்திலிருந்து, தொடர்ந்து நகரப் பகுதிகள், ஒன்றியப் பகுதிகள், கிராமப் பகுதிகள், ஊராட்சி பகுதிகள், பேரூராட்சிப் பகுதிகள், மாநகராட்சிப் பகுதிகள் என நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன் என்றால் அதில் குறைந்தபட்சம் அவர் 30% அவர் என்னோடு பாதுகாப்பாக துணை வந்தவர். அதற்குப் பிறகுதான் 1975-ஆம் ஆண்டு நெருக்கடி கால நேரத்தில் தலைவரோடு நெருங்கிப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. அதிலிருந்து 2005-ஆம் ஆண்டு வரை அவருடைய உயிர் பிரிகிற வரையில், கடைசி வரையில், தலைவருக்குத் துணையாக இருந்து பணியாற்றிய ஒரு தியாகச் செம்மல்தான் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்கள் என்பதை இங்கு நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எப்படி, அண்ணா அவர்கள், கலைஞர் அவர்கள், பேராசிரியர் அவர்கள், நாவலர் அவர்கள், மதியழகன் அவர்கள் போன்றவர்கள் எல்லாம் இளைஞர்களாக இருந்து எப்படி தலைவராகப் பொறுப்பிற்கு வந்தார்களோ, அந்த இளைஞர்களாக இருந்தவர்கள் பொறுப்பிற்கு வந்த காரணத்தினால்தான் இளைஞர்தான் கட்சிக்குத் தேவை என்பதை உணர்ந்த காரணத்தினால்தான் அந்த இளைஞரணியை உருவாக்கினார்கள். அந்த இளைஞரணியை உருவாக்கி எந்த அளவிற்கு கம்பீரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை கண்கூடாக பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். நான் பல நிகழ்ச்சிகளில் சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எத்தனையோ அணிகள் இருந்தாலும், இதைச் சொல்கின்ற காரணத்தால் மற்ற அணிகளைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள். எல்லா அணியைவிட ஒரு சிறந்த அணி இருக்கிறது என்றால் அது இளைஞரணி என்பது எல்லோருக்கும் நன்றாக தெரியும். அது எதார்த்த நிலை. அதை எல்லோரும் புரிந்துகொண்ட நிலைதான், அதனால் தவறாக நினைக்க வாய்ப்பே கிடையாது. அந்த இளைஞரணி இன்றைக்கு கம்பீரமாகத் தம்பி உதயநிதி ஸ்டாலின் தலைமையில் வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். விரைவில், சேலத்தில் மாநாடு நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டிற்காக மாவட்டவாரியாகக் கூட்டங்களை அவர் நடத்திக் கொண்டிருக்கிறார். செயல்வீரர் கூட்டங்களை அவர் நடத்திக் கொண்டிருக்கிறார். மாவட்டக் கழக நிர்வாகிகளோடு, கழக முன்னோடிகளோடு ஆலோசனைகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார். மோட்டார் சைக்கிள் பேரணியை தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தி, ஒரு எழுச்சியை இன்றைக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். எப்படி அன்றைக்கு இளைஞரணி தேவை, இளைஞரணியை பெருமைப்படுத்த வேண்டும், ஊக்கப்படுத்தவேண்டும், உற்சாகப்படுத்தவேண்டும் என்று பேராசிரியர்களும், தலைவர் அவர்களும் விரும்பினார்களோ, அதேபோல் இன்றைக்கு நானும், நம்முடைய பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களும், திரு.டி.ஆர்.பாலு அவர்கள் போன்றவர்கள் எல்லாம் இளைஞரணி வளரவேண்டும் என்று விரும்பிக்கொண்டு இருக்கிறோம். அந்த விருப்பத்திற்கேற்ப அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி இன்னும் சிறப்பாக செயல்படவேண்டும் என்று இந்த நேரத்தில் நம்முடைய திருமங்கலம் கோபால் இல்லத்தில் நடைபெறக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சியில் கேட்டுக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட வளர்ச்சியைக் கண்டு இன்றைக்கு பொறுத்துக்கொள்ள முடியாமல், ஏதேதோ தவறான பிரச்சாரங்களை, தேவையற்ற பிரச்சாரங்களை, பொய் செய்திகளை, அதுவும் சமூக ஊடகங்களை பயன்படுத்தி, மக்களை குழப்பிக் கொண்டிருக்கக்கூடிய அந்த செய்திகளையும் தொடர்ந்து நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். யார் வேண்டுமானாலும் குழப்பட்டும், அண்ணாமலை போன்றவர்கள் குழப்பினாலும் கவலைப்படமாட்டேன். ஆனால், ஒன்றியத்தில் இருக்கக்கூடிய நம்முடைய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், நாம் கோயில்களில் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு நம்முடைய சேகர் பாபு அவர்கள் மிக விளக்கமாக, தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார், மேற்கொண்டு நான் அதற்கு விளக்கம் சொல்ல விரும்பவில்லை. நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இதுவரைக்கும் 5500 கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் இடங்கள், சொத்துக்கள் மீட்கப்பட்டிருக்கிறது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். உள்ளபடியே, அவர்களுக்கு பக்தி என்று ஒன்று இருந்தது என்றால், என்ன செய்யவேண்டும் என்று சொன்னால், திமுக ஆட்சியைப் பாராட்டவேண்டும். அந்த பக்தி இல்லை, பகல் வேஷம். மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் அவர்கள் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் உண்மை. இந்த நிலையில்தான் இன்றைக்கு நாடு சென்று கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு போலீஸ் அதிகாரி, பெயர் சொல்ல விரும்பவில்லை, அவர் தனது ஷீயீவீநீவீணீறீ ஷ்லீணீமீ உணீஜீஜீ-இல் ஒரு செய்தியைப் போட்டு இருக்கிறார். வழக்கு போட்டு இருக்கிறோம். பத்திரிகையில் இன்றைக்கு வரும் நீங்கள் பாருங்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய திராவிட மாடல் ஆட்சியை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்பதற்காக கங்கணம் கட்டிக்கொண்டு சிலர் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம், முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் வரக்கூடிய தேர்தலில் நீங்கள் எல்லாம் பயன்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நல்ல வகையில் பயன்படுத்துவதைத்தான் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்களும் விரும்பி இந்த இயக்கத்திற்காக பணியாற்றியிருக்கிறார்கள். எனவே, அவருடைய புகழ் வாழ்க! அவருடைய செல்வங்கள் சிறப்புப் பெற்று சிறப்போடு வாழ்க! புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்கு தொண்டர்களாய் வாழுங்கள், வாழுங்கள்” என்று வாழ்த்தி, எல்லாத் திருமண விழாக்களில் சொல்வதுபோல, மணமக்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், அழகான தமிழ்ப் பெயரைச் சூட்டுங்கள், சூட்டுங்கள் என்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.






இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் புதிய ஆலையை அமைப்பதற்கான அடுத்த சுற்று முதலீடுகளுக்காக கர்நாடக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது



சென்னை, 25 நவம்பர் 2023: **• சுமார் 3,300 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய ஆலை 2026 இல் கட்டி முடிக்கப்படும்.**

**• புதிய ஆலை ஆண்டுக்கு 1,00,000 யூனிட்கள் உற்பத்தி திறனை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**• சுமார் 2000 கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**• இந்தியாவில் டி கே எம் இன் 25 ஆண்டுகால குறிப்பிடத்தக்க பயணத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட முதலீடுகள்.**

"மேக் இன் இந்தியா" மற்றும் "அனைவருக்கும் மாஸ் ஹேப்பினஸ்" என்ற அதன் உறுதிப்பாட்டிற்கு உண்மையாக இருந்து, டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் (டிகேஎம்) இன்று கர்நாடகா அரசுடன் தனது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. புதிய முதலீடுகள் மூலம் நாட்டில் தற்போதுள்ள செயல்பாடுகள்.

சுமார் ரூ. 3,300 கோடி முதலீடுகள், இந்தியாவில் டி கே எம் இன் 25 ஆண்டுகால செயல்பாடுகளின் முக்கிய சந்தர்ப்பத்துடன் இணைந்து, ஒரு புதிய ஆலையை அமைப்பதை உள்ளடக்கியது, இதன் மூலம் திறனை அதிகரிக்கிறது, இதன் விளைவாக உள்ளூர் உற்பத்தி சூழல் அமைப்புக்கு கணிசமான ஊக்கத்தை அளிக்கிறது. "அனைவருக்கும் இயக்கம்" உருவாக்க புதிய தொழில்நுட்பங்களை கொண்டு வருகிறது. இது இந்தியாவின் மூன்றாவது ஆலையாகும், இவை அனைத்தும் கர்நாடகாவில் பெங்களூருக்கு அருகிலுள்ள பிடாடியில் அமைந்துள்ளது. இந்த வளர்ச்சியானது, சப்ளையர் சுற்றுச்சூழல் அமைப்பில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, மேலும் முதலீடுகள் மற்றும் வேலை உருவாக்கத்திற்கான சாத்தியக்கூறுகளையும் கொண்டு வருகிறது.

## ஆட்டோ ஓட்டுநர் சுந்தர்ராஜ் கொடுத்த தகவலை வைத்து உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.2 கோடியே 1 இலட்சம் பணத்தை எடுத்து வந்த 3 நபர்கள் பிடிபட்டனர்



சென்னை, 25 நவம்பர் 2023: சென்னை, செம்பியம், மேல்பட்டடை, எஸ்.எஸ்.வி. கோயில் 1வது தெருவைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் சுந்தர்ராஜ், வ/39, த/பெ.வேலாயுதம் என்பவர் அதிகாலை, சி-2 யானைகவுனி காவல் நிலையத்திற்கு வந்து, காலை புழலில் இருந்து 3 நபர்களை 4 டிராவல் பைகளுடன் யானைகவுனி, சென்டிரல் இரயில்வே பார்சல் அலுவலகம் வரை சவாரியாக அழைத்துச் சென்று சற்று முன் அங்கு இறக்கி விட்டதாகவும், அவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்தார். அதன்பேரில், காவல் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, ஆட்டோ ஓட்டுநர் அடையாளம் கூறிய 4 டிராவல் பைகளுடன் இருந்த 3 நபர்களை பிடித்து விசாரணை செய்தபோது, முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர். சந்தேகத்தின்பேரில், அவர்களின் டிராவல் பைகளை சோதனை செய்தபோது, அதில் பெருமளவு பணம் இருந்தது தெரியவந்தது.

சி-2 யானைகவுனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் 3 நபர்களையும் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை செய்ததில், பிடிபட்ட நபர்கள் 1.பைசூல்லா, வ/28, த/பெஹுமாயுன், நெல்லூர், 2.ஷேக் யாசின், வ/24, த/பெ.ரஹீம், குண்டூர், 3.ஷேக் தாவூத், வ/20, த/பெ.ஷேக் முஸ்தான் வாலி, குண்டூர், என்பதும், உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.2 கோடியே 1 இலட்சம் பணம் வைத்திருந்ததும் தெரியவந்தது.

அதன்பேரில், சி-2 யானைகவுனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், விசாரணைக்குப் பின்னர் பிடிபட்ட 3 நபர்களையும், கைப்பற்றப்பட்ட ரூ.2 கோடியே 1 இலட்சம் பணத்தையும், சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள வருமான வரித்துறை, புலனாய்வு பிரிவு அதிகாரியிடம் மேல்நடவடிக்கைகாக ஒப்படைக்கப்பட்டனர்.

## என் டி சி குழுமம் ராணிப்பேட்டையில் 200வது கண் சிகிச்சை முகாமை நடத்தியது




சென்னை, 25 நவம்பர் 2023: என்டிசி குழுமத்தின் ஒரு அங்கமான பழனியம்மாள் கந்தசாமி அறக்கட்டளை மற்றும் ஜூனியர் சேம்பர் இன்டர்நேஷனல் இணைந்து 200வது கண் பரிசோதனை முகாமை தமிழ்நாடு ராணிப்பேட்டையில் நடத்தியது. என்டிசி குழுமம் எப்போதுமே வசதி குறைந்த சமூகங்களை மேம்படுத்துவதற்கும் நிலையான வாழ்வாதாரத்தை வழங்குவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது. 2025 ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் பேருக்கு கண் பரிசோதனை முகாம்களை வழங்குவதே நிறுவனத்தின் நோக்கமாகும். இந்த தன்னலமற்ற பணி ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படுகிறது, இதனால் ஒவ்வொரு நபரும் கண் பரிசோதனையை எளிதாக அணுகலாம் மற்றும் கண் ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனைகளை கண்டறிய முடியும். இந்த முயற்சி இதுவரை 40,000 பேருக்கு மேல் உதவியிருக்கிறது. என்டிசி குழுமம் இந்த முயற்சியை, சரியான கண் பரிசோதனைகளை அணுகவோ அல்லது வாங்க முடியாதோருக்கு நம்பிக்கை மற்றும் நல்வாழ்வின் அடையாளமாக கருதுகிறது. கண் சிகிச்சை முகாம்களை நடத்துவது மட்டுமின்றி, அறுவை சிகிச்சைக்கான தேவைகளையும் வழங்குவதே நிறுவனத்தின் நோக்கம்.

என்டிசி குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர்.கே.சந்திரமோகன் தனது உற்சாகத்தை வெளிப்படுத்தினார், "என்டிசி குழுமம் குறைந்த சலுகை பெற்ற சமூகத்தினருக்கு கண் சுகாதார சேவைகளை வழங்குவதில் மற்றும் மேம்படுத்துவதில் பெருமை கொள்கிறோம், இதன் மூலம் மேம்பட்ட சுகாதார வசதிகளை வழங்குகிறோம். 2023-24 நிதியாண்டில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான நபர்களுக்கு கண் பரிசோதனை சேவைகளை வழங்குவதே எங்கள் இலக்கு.

இத்திட்டம் கோவை சங்கரா கண் மருத்துவமனையுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. நோயாளிகள் எந்தவித நிதிச் சுமையும் இன்றி அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதையும், தேவைப்படும் நோயாளிகளுக்கு கண்ணாடிகளை வழங்குவதையும் இந்தக் கூட்டாண்மை உறுதி செய்கிறது. இந்த தாக்கம் சிகிச்சை பெற்ற நபர்களிடமிருந்து ஏராளமான பதிலைப் பெற்றுள்ளது, ஏனெனில் அவர்கள் பலவீனமான வாழ்க்கையில் சிக்கியிருக்கக்கூடிய பாதை உடைக்கும் தடைகளைக் காண அவர்களுக்கு ஒரு செறிவூட்டப்பட்ட பார்வை வழங்கப்பட்டுள்ளது.

## உபெர் நிறுவனம், ஓட்டுநர்களுக்கான வெகுமதி திட்டத்தை, 12 நகரங்களில் அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 25 நவம்பர் 2023: உபெர் நிறுவனம் ,ஓட்டுநர்களை மனதில் கொண்டு உருவாக்கப்பட்ட மற்றும் சாலையிலும் வெளியேயும் அவர்கள் தங்கள் இலக்குகளை அடைய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட வெகுமதித் திட்டமான உபெர் ப்ரோ' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. உபெர் ப்ரோ ஓட்டுநர்களுக்கு சம்பாதிப்பதற்கான புதிய வழிகள், கூடுதல் தெரிவுகள் மற்றும் ஆதரவு மேலும் அவர்கள் முன்னோக்கிச் செல்லும்போது ஆழமான தள்ளுபடிகள் ஆகியவற்றை வழங்குகிறது. இது 12 இந்திய நகரங்களில் அற்புதமான வெகுமதிகள், சலுகைகள் மற்றும் பிரத்யேக அம்சங்களுடன் தொடங்கப்பட்டுள்ளது. வலுவான வாடிக்கையாளர் மதிப்பீடு (4.8க்கு மேல்) மற்றும் குறைந்த பயணத்தை ரத்து விகிதங்கள் ஆகியவற்றுடன் ஓட்டுநர்களுக்கு வெகுமதி அளிப்பதனால் ஒவ்வொரு பயணத்தையும் பயணர்கள் மற்றும் டிரைவர்களுக்கு ஒன்றுபோல கண்கவரச் செய்வத்தின்முலம் மூலம் இந்த திட்டம் ஒட்டுமொத்த இயங்குதள அனுபவத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியாவில் உபெர் ப்ரோ அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த உபெர் இந்தியா அண்ட் சௌத் ஆசியா இன் செயல்பாடுகள் இயக்குனரான ஷிவா சைலேந்திரன், "ஹிதீமீக்ஷீ இல், எங்கள் ஓட்டுநர்கள் எங்கள் செயல்பாடுகளின் மையமாக உள்ளனர். உபெர் ஐத் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு முறையும் பயணர் மற்றும் ஒட்டுனருக்கு ஒரு சிறந்த சவாரி அனுபவத்தை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். உபெர் ப்ரோ, ஒரு அதிக செயலி மதிப்பீடு மற்றும் குறைந்த பயண ரத்து செய்வதல்கள் ஆகியவற்றை பராமரிப்பதன் மூலம் பயணர்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்கும் டிரைவர்களுக்கு வெகுமதி அளிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் #IndiaKiRide ஐ எங்களுக்கு உருவாக்கி, உபெர் செயலியின் ஒட்டுமொத்த அனுபவத்தை மேம்படுத்தும் சிறந்த தரமதிப்பீடு பெற்ற டிரைவர்களால் உபெர் இயங்குதளத்தின் தழுவல் மற்றும் தொடர்ச்சியான பயன்பாட்டை ஊக்குவிப்பதில் இது நீண்ட தூரம் செல்லும்." என்று கூறினார்.

உபெர் ப்ரோ, டைமண்ட் நிலை ஒரு சாத்தியமான அதிகபட்ச நிலையாக, ப்ளூ , கோல்ட் , பிளாட்டினம் மற்றும் டைமண்ட் ஆகிய நான்கு நிலைகளைக் கொண்டுள்ளது. தளத்தில் புதியதாக இருக்கும் ஒரு ஓட்டுநர் புளூ அடுக்கு நிலையுடன் தொடங்கி, ஒவ்வொரு நிறைவுப் பயணத்திலும் 'புள்ளிகள்' பெற்று மற்ற வரன்முறைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் மேல்நோக்கி முன்னேறுகிறார். ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் புள்ளிகள் மீட்டமைக்கப்படும், எனவே ஓட்டுநர்களின் அடுக்கு நிலை, 3 மாதங்களின் ஒரு சுழற்சி காலத்தில் தீர்மானிக்கப்படுகிறது. ஓட்டுநர்கள் ஒரு உயர் அடுக்கு நிலையை நோக்கிச் செல்லும்போது, தள்ளுபடி செய்யப்பட்ட வாகன பராமரிப்பு செலவு மற்றும் வாகன காப்பீடு மற்றும் மைக்ரோ கிரெடிட் வழங்கல்கள் போன்ற மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் பிரத்யேக சலுகைகள் மற்றும் நடைமுறை வெகுமதிகளுக்கான அணுகலை அவர்கள் பெறுகிறார்கள்.

## நியூஸ் தமிழ் 24X7 தொலைக்காட்சி நிருபர் மற்றும் சிலர் மீது வழக்கு பதிவு

சென்னை, 25 நவம்பர் 2023: 20.11.2023 அன்று 0015 மணியளவில், நந்தனத்தில் அமைந்துள்ள பிக் புல் லான்ஜ் என்ற தனியார் மதுக்கூடத்திற்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிவடைந்த பின்னர் சென்ற ஐந்திற்கும் மேற்பட்ட அடையாளம் தெரியாத நபர்கள் தங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், மேற்படி மதுக்கூடத்தில் பிரச்சனை செய்துள்ளனர். அச்சமயம், பெண்கள் உட்பட சில வாடிக்கையாளர்கள் அம்மதுக்கூடத்தில் கிரிக்கெட் உலகக்கோப்பை இறுதி போட்டி ஒளிபரப்பை பார்த்துக்கொண்டிருந்தனர். மேற்படி பிரச்சனை குறித்து தகவல் தெரிந்ததையடுத்து, சுதர்சன் (நிருபர், நியூஸ் தமிழ் 24 X 7 தொலைக்காட்சி) மற்றும் சிலருடன் அங்கு வந்துள்ளார். அவர்கள் அப்பிரச்சனையை வீடியோ பதிவு செய்துகொண்டிருந்தபோது, சில அடையாளம் தெரியாத நபர்கள் மதுக்கூடத்திலிருந்து வெளியே வந்த பெண்கள் குறித்து தவறான, இழிவான மற்றும் ஆபாசமான வார்த்தைகளை கூறியுள்ளனர். அப்பிரச்சனையை பல்வேறு தொலைக்காட்சிகள் ஒளிபரப்பியுள்ளன.

இது குறித்து, 23.11.2023 அன்று, பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் அளித்த புகாரின் பேரில், மேற்படி சுதர்சன் மற்றும் சிலர் மீது ஜெ1 சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் ச/பி 143, 341, 294(பி), 354 (ஏ), 509 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையில் உள்ளது.



**திருவள்ளூர் மேற்கு மாவட்ட அதிமுக திருத்தணி ஒன்றியம் தாடூர் பூத் எண்.231 -ல் வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் மற்றும் நீக்குதல் சிறப்பு முகாமை பார்வையிடும் அதிமுக தடூர் கிளை செயலாளர் ரமனா.**

## காலவாசி படம் நடக்கும்போதே நீங்க கைய விரிச்சுட்டீங்க ஞானவேல்ராஜா என்னால தயாரிக்க முடியாது.. பணம் இல்ல அப்படின்னு... சகோதரர் சூர்யா வந்து "படத்தை நீங்களே வச்சுக்கோங்க அமீர் அண்ணா" அப்படின்னு சொல்லிட்டு போய்ட்டார் அன்னைக்கு அமீர் அண்ணன் படத்தை நிறுத்தி இருந்தா இந்த படம் வந்துருக்குமா...? ஒரு ஹீரோ வெளில வந்துருப்பாரா...? களத்திலேயே இருந்த கார்த்தி அமைதியா இருக்குறதைத் தான் என்னால இப்ப வரைக்கும் ஏத்துக்க முடியல தேவைப்பட்டா நானும் பேச வேண்டி வரும்... தப்பு தப்பா பேசுறத இதோட நிறுத்திக்கங்க... அதுதான் எல்லாருக்கும் நல்லது - சமுத்திரக்கனி

சென்னை, 25 நவம்பர் 2023: திரு.ஞானவேல்ராஜாவுக்கு., அமீர் அண்ணனை பார்த்து நீங்க பேசுன வீடியோவை இப்பதான் பார்த்தேன். ரொம்ப பெரிய தப்பு பண்ணிட்டீங்க ப்ரோ...!

தப்பு தப்பா பேசி இருக்கீங்க...! கேக்குறதுக்கே ரொம்ப கஷ்டமா இருந்துச்சு... ஏன் சொல்றேன்னா... அந்த படத்துல ஆரம்பத்துல இருந்து கடைசி வரைக்கும் இருந்தவன் நான்... எல்லா பிரச்சனையும் எனக்கு தெரியும்...

ஆறு மாசம் "பருத்திவீரன் படப்பிடிப்பிலே இருந்துருக்கேன்...ஆனா உங்கள ஒருநாள் கூட அங்க பார்த்தது இல்ல...நான்தான் தயாரிப்பாளர், நான்தான் தயாரிப்பாளர் னு பேசிட்டு இருக்கறீங்க.. உங்கள தயாரிப்பாளர்

ஆக்கினது, கார்த்தியை ஹீரோ ஆக்கினது அந்த மனுஷன்...எந்த நன்றி விசுவாசமும் இல்லாம பேசி இருக்குறீங்க பிரதர் ...தப்பில்லையா ? எங்கிருந்து வந்தது இவ்வளவு தைரியம்...? பருத்திவீரன் சம்பந்தமான பிரச்சனைகள் வரும்போதெல்லாம் சரி நமக்கெதுக்கு.. அவங்களே பேசிக்குவாங்க...அவங்களே ஏத்துக்குவாங்க... அப்படின்னு தான் நான் இருந்தேன்... ஆனா இந்த முறை அப்படி இருக்க முடியல... ரொம்ப கஷ்டமா இருக்கு...

அண்ணன் இந்த படத்துக்காக எவ்வளவு உழைச்□ருக்கார்...எவ்ளோ கஷ்டப்பட்டுருக்கார்ன்னு எனக்கு தான் தெரியும்.. ஏன்னா காலவாசி படம் நடக்கும்போதே நீங்க கைய விரிச்சுட்டீங்க...என்னால தயாரிக்க முடியாது.. பணம் இல்ல அப்படின்னு... சகோதரர் சூர்யா வந்து "படத்தை நீங்களே வச்சுக்கோங்க அமீர் அண்ணா" அப்படின்னு சொல்லிட்டு போய்ட்டார்...

அதுக்குப்பிறகு அந்த படத்தை முடிக்கிறதுக்கு ஒவ்வொரு நாளும், அமீர் அண்ணனோட சொந்தக்காரங்க, நண்பர்கள், இப்படி ஒவ்வொருத்தர் கிட்டயும் அவர் சொல்லச் சொல்ல போய் ஒரு லட்சம், ஐம்பதாயிரம், ரெண்டு லட்சம் இப்படி வாங்கிட்டு வந்தவன் நான்.. இது இல்லாம தம்பி சசி கூட கொஞ்சம் பணம் கொடுத்திருக்கான் பிரதர் அந்த படத்துக்கு...

□ந்த அம்பது,அறுபது பேர் சேர்ந்து காசு கொடுத்து தான் அந்த படத்தை எடுத்து முடிச்சோம்... ஆனா கடைசில நீங்க வந்து அந்த தயாரிப்பாளர் சட்டைய போட்டுக்கிட்டிங்க... உண்மையிலேயே யார் தயாரிப்பாளர்..? சொல்லுங்க... தயாரிப்பாளர் பதவிய அண்ணன் அமீர் உங்களுக்கு விட்டுக்கொடுத்தார்...!

அந்த பஞ்சாயத்து வந்தப்ப யார் வேணாலும், என்ன வேணாலும் பேசியிருக்கலாம்.. ஆனா களத்திலேயே இருந்த கார்த்தி அமைதியா இருக்குறதைத் தான் என்னால இப்ப வரைக்கும் ஏத்துக்க முடியல...

ஒருநாள் அமீர் அண்ணனோட நண்பர் ஒருத்தர்...எதுக்கு இது... அப்படியே விட்டுட வேண்டியது தானே .. நிறுத்துங்க படத்தை ... அப்படின்னு சொன்னாரு... அதுக்கு அமீர் அண்ணன் என்ன சொன்னாரு தெரியுமா?

ஆரம்பிச்சுட்டோம்.. .கார்த்தியோட எதிர்காலம் இது.. அதுமட்டும் இல்லாம பெரியவர் என் கைய புடிச்சிட்டு கார்த்தி கைய புடிச்சு என் கைல கொடுத்துட்டு சொன்ன வார்த்தைகள் எல்லாம் என் காதிலேயே இருக்கு... நான் இவங்களுக்காக ஏதும் செய்யலிங்க.. அந்த பெரிய மனுஷனுக்காகத்தான் செய்றேன்..." அப்படின்னு சொல்லி செஞ்சார்...

அன்னைக்கு அவரு படத்தை நிறுத்தி இருந்தா இந்த படம் வந்துருக்குமா...? ஒரு ஹீரோ வெளில வந்துருப்பாரா...? என்ன பேச்சு பேசுறீங்க?ஆனா அவ்வளவு தூரம் பெருந்தன்மையா நடந்துக்கிட்ட ஒரு மனுஷனைதான் எல்லாருமா சேர்ந்து, இப்படி அம்பது அறுபது பேர்ட்ட வாங்குன பணத்துக்குத்தான் நீங்கெல்லாம் சேர்ந்து உக்கார்ந்து கணக்கு கேட்டீங்க... எனக்கே தெரியல.. எத்தனை பேர்ட்ட போய்ட்டு வாங்கிட்டு வந்தேன்னு... யார் யார் எவ்ளோ கொடுத்தாங்க-ன்னு.. சொன்ன வார்த்தைய காப்பாத்தணும்னு பல பேர்கிட்ட கை ஏந்தி அந்த படத்தை முடிச்சாரு அமீர் அண்ணன்... அதுக்கு ஆயிரம் கோடி இல்ல. லட்சம் கோடி கொடுத்தாக்கூட ஈடாகாதுங்க...

நீங்கெளெல்லாம் ஏதோ ஒண்ணரை கோடிக்கு கணக்கு கேட்டுட்டு இருக்கீங்க ஞானவேல்...! செலவு பண்ணது அதுக்கும் மேல...அதெல்லாம் பாவம் கணக்கிலேயே இல்ல! அமீர் அண்ணனோட பணம் அது... இப்ப நான் சொல்லிருக்கிறது ஒரு சம்பவம் தான்... இன்னும் நிறைய இருக்கு தேவைப்பட்டா நானும் பேச வேண்டி வரும்... இந்தமாதிரி பொதுவெளில தப்பு தப்பா பேசுறத இதோட நிறுத்திக்கங்க... அதுதான் எல்லாருக்கும் நல்லது.

## 'ஹாய் நான்னா' திரைப்படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் டிசம்பர் 7 அன்று உலகெங்கும் வெளியாகிறது மனைவியை முத்தம் கொடுக்காமல் யாராவது இருப்பார்களா? முன்னர் மாதிரி மரத்தை சுற்றுவது, பூவைக் காட்டுவது என்று இப்போதைய ஆடியன்ஸை ஏமாற்ற முடியாது, முத்தத்தை திரையில் காட்டலாம் தவறில்லை இது ஒரு முறை பார்க்கும் படமாக இருக்காது, மீண்டும் மீண்டும் பார்த்து ரசிக்கும் படைப்பாக இருக்கும் - நானி





சென்னை, 25 நவம்பர் 2023: வைரா என்டர்டெயின்மென்ட்ஸ் தயாரிப்பில் ஷௌர்யுவ் இயக்கத்தில் 'நேச்சுரல் ஸ்டார்' நானி மற்றும் மிருணாள் தாக்கூர் முதன்முறையாக ஜோடி சேரும் பான்-இந்தியா திரைப்படமான 'லீவீ நான்னா' ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் டிசம்பர் 7 அன்று உலகெங்கும் வெளியாகவுள்ள நிலையில் படத்தின் நாயகன் நானி இன்று சென்னையில் பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களை சந்தித்தார். இந்நிகழ்வினில் நடிகர் நானி பேசியதாவது...

'நான்னா' என்றால் தமிழில் அப்பா, ஆனால் படத்தின் பெயர் எல்லா மொழியிலும் ஒரே மாதிரி இருக்கட்டும் என்று நினைத்தோம், அது லிப் சிங்க் மற்றும் பலவற்றுக்கும் உதவியாய் இருந்தது. படத்தில் நிறைய முறை 'நான்னா' என்ற வார்த்தை வருகிறது, அதுவும் ஒரு காரணம். இது ஒரு மிக அழகான படம். படத்தை முழுதாகப் பார்த்த பிறகு சொல்கிறேன், இந்தப்படம் எனக்கு பெருமை தரும் படம். டிசம்பர் 7 திரையரங்குகள் கொண்டாடும் படமாக இது இருக்கும். ஒரு காதல் படம், ஆனால் பரபரவென போகும் கதை என□ கண்டிப்பாக உங்கள் மனதில் இடம்பிடிக்கும் படமாக இருக்கும். தமிழில் நான் நடிக்க ஆரம்பித்த காலத்திலிருந்து எப்போதும் எனக்கு ஆதரவு தந்து வருகிறீர்கள். உங்கள் அனைவருக்கும் நன்றி. இப்படத்திற்கும் ஆதரவு தாருங்கள். இது ஒரு முறை பார்க்கும் படமாக இருக்காது, மீண்டும் மீண்டும் பார்த்து ரசிக்கும் படைப்பாக இருக்கும். டிசம்பர் 7 உங்களை திரையரங்குகளில் சந்திக்கிறேன், நன்றி.

மேலும் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு நானி பதிலளிக்கையில்ஞ் அம்மா செண்டிமெண்ட், அப்பா செண்டிமெண்ட் என பிரிக்க முடியாது. அன்பு ஒன்று தான். அம்மா படங்கள் எல்லாம் நிறைய வந்துவிட்டன□, இப்போது அப்பா படங்கள் வர ஆரம்பித்துள்ளன□. அது நல்லது எனறே நினைக்கிறேன். எனக்கு தமிழ்ப் படங்கள் ரொம்பப் பிடிக்கும். மணிரத்னம் சார், கமல் சார் படங்களின் தீவிர ரசிகன் நான். ஆனால் தமிழ் முழுமையாக பேச வராது, இப்போது கற்றுக்கொண்டிருக்கிறேன். விரைவில் பேச முடியும் என நம்புகிறேன். ஆரம்பத்தில் தமிழ் இயக்குநர்களோடு வேலை பார்த்தேன். ஆனால் அதை இங்குள்ள மக்கள் தெலுங்குப் படமாக பார்க்க ஆரம்பித்து விட்டார்கள், தெலுங்கு மக்கள் தமிழ்ப் படமாக பார்க்க ஆரம்பித்தார்கள். பின்னர் 'பாகுபலி', 'காந்தாரா' போன்ற□ படங்கள் வந்த பிறகு தமிழ் நடிக□ர், தெலுங்கு நடிகர் என்று பிரித்து பார்த்து படம் எடுக்கத் தேவையில்லை, சொல்லும் கதைக்கு உண்மையாக இருந்தால் போதும், அது மக்களிடம் போய்ச் சேரும் எனப் புரிந்தது, எனவே தான் நான் கதைகளுக்கு முக்கியத்துவம் தருகிறேன். தமிழ், தெலுங்கு எனப் பிரித்து வைக்க தேவையில்லை, என் எல்லாப் படங்களும் இங்கு தமிழில் வரும். நடிகை மிருணாள் இந்தப் பாத்திரத்திற்கு சரியாக இருப்பார் என்று மொத்த டீமும் நினைத்து தான் தேர்வு செய்தோம், அதை அவர் அற்புதமாக செய்துள்ளார். ஒரு மிகச்சிறந்த தமிழ் இயக்குநர், எனக்குப் பிடித்தவர், அவர் எனக்காக ஒரு கதை சொன்னார், விரைவில் அப்படம் பற்றிய அறிவிப்பு வரும். காதலை உணர்வுப்பூர்வமாக சொன்னால் அதை விட பெரிய ஆக்சன் திரில்லர் எல்லாம் கிடையாது. அது பயங்கரமாக இருக்கும். அதை இந்தப்படம் பார்க்கும் போது உணர்வீர்கள். எனக்கு இந்தப்படத்தில் சவாலாக இருந்தது என்னவெனில், நான் ஏற்கனவே 'ஜெர்ஸி'யில் அப்பாவாக நடித்துவிட்டேன் அது மிகப் பெரிய ப்ளாக்பஸ்டர், மீண்டும் அதே போல் ஆனால் அதிலிருந்து மாறுபட்டு நடிப்பது தான் சவாலாக இருந்தது. முன்னர் எல்லாம் முத்தக் காட்சியில் திரை இருட்டாகிவிடும், 2023ல் கிஸ் பெரிய விசயம் இல்லை. இங்கு கல்யாணம் ஆனவர் இருப்பீர்கள், மனைவியை முத்தம் கொடுக்காமல் யாராவது இருப்பார்களா? முன்னர் மாதிரி மரத்தை சுற்றுவது, பூவைக் காட்டுவது என்று இப்போதைய ஆடியன்ஸை ஏமாற்ற முடியாது, முத்தத்தை திரையில் காட்டலாம் தவறில்லை. நம் வாழ்க்கையில் பெண்கள் பெரும் பங்கு வகிக்கிறார்கள், படத்தில் மட்டும் ஏன் இருக்கக்கூடாது? என் படத்தில் அவர்கள் பெரிய இடம் வகிப்பது எனக்கு மகிழ்ச்சி. இந்தப்படம் ஆண் பெண் உறவை மிகச்சிறப்பாக பேசும் படமாக இருக்கும், உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் சிறப்பான படைப்பாக இருக்கும். இத்திரைப்படத்தை பெரும் பொருட்செலவில் வைரா என்டர்டெயின்மென்ட்ஸ் பேனரில் மோகன் செருக்கூரி (சிவிஎம்) மற்றும் டாக்டர் விஜேந்தர் ரெட்டி தீகலா தயாரிக்கிறார்கள்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ஒரே சமயத்தில் பான்-இந்தியா திரைப்படமாக இந்த ஆண்டு டிசம்பர் 7 அன்று 'லீவீ நான்னா' வெளியாகிறது. படக்குழுவினர்: நடிகர்கள்: நானி, மிருணால் தாக்கூர், பேபி கியாரா கண்ணா, இயக்கம்: ஷௌர்யுவ், தயாரிப்பு: மோகன் செருக்கூரி (சிவிஎம்) மற்றும் டாக்டர் விஜேந்தர் ரெட்டி தீகலா, தயாரிப்பு நிறுவனம்: வைரா என்டர்டெயின்மென்ட்ஸ், ஒளிப்பதிவு: சானு ஜான் வர்கீஸ், இசை: ஹேஷாம் அப்துல் வஹாப், தயாரிப்பு வடிவமைப்பு: அவினாஷ் கொல்லா, படத்தொகுப்பு: பிரவீன் அந்தோணி, நிர்வாகத் தயாரிப்பாளர் - சதீஷ் ஈ.வி.வி, ஆடை வடிவமைப்பாளர்: ஷீத்தல் ஷர்மா, மக்கள் தொடர்பு: நிகில் முருகன்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

சனிக்கிழமை,
நவம்பர் 25, 2023

# என் எஸ் டி சி ஜப்பானில் வணிக மேட்ச்மேக்கிங் கருத்தரங்குகளுடன் உலகளாவிய திறமை மொபிலிட்டியை ஊக்குவிக்கிறது

சென்னை, 25 நவம்பர் 2023: இந்தியாவை உலகளாவிய திறன் மையமாக நிலைநிறுத்த மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் முன்வைத்த தொலைநோக்கு நோக்கத்திற்கு இணங்க, தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (என் எஸ் டி சி) சமீபத்தில் ஒசாகா மற்றும் டோக்கியோல் இரண்டு பயனுள்ள வணிக மேட்ச்மேக்கிங் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தது.

ஜப்பான் இன்டர்நேஷனல் டிரெய்னி & ஸ்கில்டு தொழிலாளர் ஒத்துழைப்பு அமைப்பு (ஜிட்கோ) மற்றும் இந்தியத் தூதரகம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்குகள் முதன்மையான நோக்கத்தைக் கொண்டிருந்தன: இந்திய அனுப்பும் அமைப்புகளின் (எஸ் ஓ) பார்வையை மேம்படுத்துவது மற்றும் கட்டாய மதிப்பு முன்மொழிவை அடிக்கோடிட்டுக் காட்டுவது. ஜப்பானின் திறமையான தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் இந்தியா முன்வைக்கிறது

திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் (எம் எஸ் டி ஈ), வெளியுறவு அமைச்சகம் (எம் ஈ ஏ) மற்றும் இந்தியாவில் உள்ள ஜப்பான் தூதரகம் உள்ளிட்ட முக்கிய அரசாங்க அமைப்புகளிடமிருந்து கருத்தரங்குகள் மதிப்புமிக்க ஆதரவைப் பெற்றன.

இந்த கருத்தரங்குகள் குறிப்பாக 2017 அக்டோபரில் தொடங்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சித் திட்டம் (டி ஐ டி பி) மற்றும் ஜனவரி 2021 இல் நிறுவப்பட்ட குறிப்பிட்ட திறன்மிக்க பணியாளர் (எஸ் எஸ் டபிள்யூ) திட்டம் போன்ற அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க இரண்டு முயற்சிகளை மையமாகக் கொண்டது.

இந்த நிகழ்வில், பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய பங்கேற்பாளர்கள், நடைமுறையில் உள்ள திறன் இடைவெளியை மூடும் நோக்கில் ஆக்கப்பூர்வமான விவாதங்களில் ஈடுபட்டனர். ஜப்பானிய மேற்பார்வை நிறுவனங்கள் (எஸ் வி ஓ) மற்றும் செயல்படுத்தும் அமைப்புகளுடன் ஒத்துழைக்க இந்திய பங்குதாரர் அமைப்புகளுக்கு (எஸ் ஒஉ) ஒரு பயனுள்ள தளத்தை உருவாக்குவது இதில் அடங்கும்.

இந்த நிகழ்வில் ஜப்பானிய மற்றும் இந்தியர்களிடமிருந்து தலா 45 பங்கேற்பாளர்கள் மற்றும் ஒசாகாவில் 40 நிறுவனங்கள் கலந்துகொண்டன.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களான திரு.அனில் குமார் ரதுரி, கான்சல் ஹெட் ஆஃப் சான்சரி, இந்திய தூதரக ஜெனரல், ஒசாகா கோபி, துணை பொது மேலாளர் சர்வதேச விவகாரங்கள் துறை, ஜிட்கோ, ஜிட்கோவின் சர்வதேச விவகாரத் துறையின் துணைப் பொது மேலாளர் திரு. மசாடோ குமே மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி அலுவலகம் மற்றும் வியூகத்தின் பொது மேலாளர் திரு. நிதின் கபூர் மற்றும் என் எஸ் டி சி துணைப் பொது மேலாளர் திரு. அன்ஷுல் சிங்கால். வெளிவிவகார அமைச்சின் பிரிவின் துணைச் செயலாளர் திரு. பூபேந்திர சிங் மற்றும் இந்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் சர்வதேச ஒத்துழைப்பு துணை இயக்குநர் திருமதி ஸ்ருதி பாண்டே ஆகியோரும் எங்களுடன் இணைந்தனர்.

டோக்கியோவில், 40 நிறுவனங்கள் மற்றும் 17 இந்திய அனுப்பும் அமைப்புகளைச் சேர்ந்த 50 + பங்கேற்பாளர்களுடன் இந்த நிகழ்வில் ஈர்க்கக்கூடிய பங்கேற்பைக் கண்டது. இந்த நிகழ்வில் என் எஸ் டி சி இந்தியா குழுவுடன் இந்திய தூதரகம், நிப்கோ மற்றும் சென்கென் ஆகியவற்றின் முக்கிய விருந்தினர்களும் கலந்து கொண்டனர்நிர்வாக துணைத் தலைவர், ஜிட்கோ. திரு. நிதின் கபூர், தலைமை நிர்வாக அதிகாரி அலுவலகம் மற்றும் வியூகத்தின் பொது மேலாளர், திரு. இசாமு கோயாமா, ஆலோசகர், என் எஸ் டி சி மற்றும் திரு. அன்ஷுல் சிங்கால், துணைப் பொது மேலாளர், என் எஸ் டி சி. ஜப்பானிய நிறுவனங்களும், நிப்கோ ஐ எம் சி போர்த் வேலி, சென்கென் கார்ப்பரேஷன் போன்ற ஆட்சேர்ப்பு முகவர்களும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டனர்.

முன்முயற்சி குறித்து பேசிய ஸ்ரீ வேத் மணி திவாரி, சி ஈ ஓ, என் எஸ் டி சி மற்றும் எம் டி, என் எஸ் டி சி இன்டர்நேஷனல், "உலகளவில் திறமையான பணியாளர்களின் தேவைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந்தியா கொண்டுள்ளது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

தொழிற்கல்வி, பயிற்சி மற்றும் மனித வள மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் இந்தியா-ஜப்பான் திறன் மேம்பாட்டு கவுன்சில் போன்ற பல்வேறு திறன் மேம்பாட்டு முயற்சிகளில் இந்தியாவும் ஜப்பானும் ஒத்துழைத்துள்ளன. 2016 ஆம் ஆண்டில், ஜப்பானிய பாணி உற்பத்தி திறன்கள் மற்றும் நடைமுறைகளுடன் 10 ஆண்டுகளில் 30,000 நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான "உற்பத்தி திறன் பரிமாற்ற ஊக்குவிப்பு திட்டம்" ஒப்பந்தத்தில் நாடுகள் கையெழுத்திட்டன. இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் முப்பத்தைந்து ஜப்பான்-இந்தியா உற்பத்தி நிறுவனங்கள் (ஜெ ஐ எம்) மற்றும் 11 ஜப்பானிய எண்டோவ் படிப்புகள் (ஜெ ஈ சி) நிறுவப்பட்டுள்ளன.

இதேபோல், 'குறிப்பிட்ட திறமையான பணியாளர்' ஏப்ரல் 2019 இல் ஜப்பான் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது, இதன் கீழ் ஆர்வமுள்ள இந்திய இளைஞர்கள் ஜப்பானில் வேலைக்குச் சென்று தங்கலாம். குறிப்பிட்ட நிபுணத்துவம் மற்றும் திறன் கொண்ட வெளிநாட்டு மனித வளங்களை ஏற்று ஜப்பானில் உள்ள கடுமையான தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஜப்பான் 'குறிப்பிட்ட திறமையான தொழிலாளி'யை அறிமுகப்படுத்தியது. ஜூலை 2022 நிலவரப்படி, இந்தியா உட்பட 15 நாடுகளுடன் ஜப்பான் எஸ் எஸ் டபிள்யூ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் (எம் ஒ சி) கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே 'குறிப்பிட்ட திறமையான தொழிலாளி'யை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் 2021 ஜனவரியில் இந்தியாவும் ஜப்பானும் கையெழுத்திட்டன.

என் எஸ் டி சி இன் 100% துணை நிறுவனமான என் எஸ் டி சி இன்டர்நேஷனல், வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார விரிவாக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தில் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி முயற்சிகளை எளிதாக்கும் துறைகளின் விரிவான பட்டியலை வழங்குகிறது.

அவர்களின் கூட்டாண்மையின் மைய தூணாக சர்வதேச இயக்கத்தை வளர்ப்பது. இந்த கூட்டுப் பார்வையானது, சவால்களைச் சமாளிப்பதற்கும், 21 ஆம் நூற்றாண்டின் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் உலகளாவிய திறமையான பணியாளர்கள் முதன்மையானவர்கள் என்ற உறுதியான நம்பிக்கையில் வேரூன்றியுள்ளது.

# தேர்வு ஆயத்தப்படுத்துதல் துறையில் முன்னணி நிறுவனமான ஆலன் கேரியர் இன்ஸ்டிடியூட் பிரைவேட் லிமிடெட் இப்போது  நேரடி வகுப்பறை மையங்களுடன் மதுரையில் உள்ளது

சென்னை, 25 நவம்பர் 2023: தேர்வு ஆயத்தப்படுத்துதல் துறையில் முன்னணி நிறுவனமான ஆலன் கேரியர் இன்ஸ்டிடியூட் பிரைவேட் லிமிடெட் இப்போது நேரடி வகுப்பறை மையங்களுடன் மதுரையில் உள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆலன் கேரியர் இன்ஸ்டிடியூட் நிறுவனம் தனது தமிழ்நாடு பயிற்சியளித்தல் திட்டங்களை சென்னையில் 4 வளாகங்களைத் தொடங்குவதன் மூலம் தொடங்கியது மற்றும் காலப்போக்கில் சென்னை முழுவதும் 8 இடங்களில் முழுமையாக செயல்படும் வளாகங்களுடன் அதன் பயிற்சியளித்தல் திட்டங்களின் இருப்பை அதிகரித்தது.

2024-25 ஆம் ஆண்டு கல்வி அமர்வு, மதுரையின் மகன்கள் மற்றும் மகள்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தேசத்தின் பிரதிநிதிகளாவதன் மூலமாக தேசத்திற்கான விருதுகளை வெல்லவும் கல்வியில் சிறந்து விளங்கி தொடர்ந்து உச்சத்தை அடைய உதவுவதற்காக அதே அர்ப்பணிப்புடனும், மிகுந்த தனிப்பட்ட அக்கறையுடனும், நேர்மையுடனும் புகழ்பெற்ற கோவில் நகரமான மதுரையில் 2023 நவம்பர் 20 அன்று இந்த நாளில் தனது நம்பகமான பயிற்சியளித்தல் திட்டங்கள் தொடங்கப்படுவதைக் காண்கிறது.

சென்னையில் இருந்து கடந்த கல்வி அமர்வின் வெற்றி வரலாறு, வரவிருக்கும் கல்வி அமர்வுகளில் மதுரையிலிருந்து ஒரு புதிய தரநிலையை அமைப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டிற்கான சாட்சியாக இருக்கிறது.

கடந்த ஆண்டு ஆலன் சென்னையில் இருந்து பிரபலமான புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரிகளில் 300 மாணவர்களும், ஐ ஐ டி எஸ் & என் ஐ டிகளில் 49 மாணவர்களும் சேர்க்கை பெற்று முத்திரை பதித்ததை தமிழ்நாடு கண்டுள்ளது.

பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஒலிம்பியாட்கள் மற்றும் தேசிய அளவிலான ப்ரீ இன்ஜினியரிங் & ப்ரீ மெடிக்கல் நுழைவுத் தேர்வுகளுக்கு 8 முதல் 12 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான வழிகாட்டுதல் திட்டங்களைத் திறப்பதன் மூலம் ஆலன் கேரியர் இன்ஸ்டிடியூட் மதுரையில் தனது வழிகாட்டுதல் பயணத்தைத் தொடங்கும்.

இந்த நிகழ்வை சிறப்பிக்கும் விதமாக டாக்டர் என் ரஹரன் எச்யூ ஐ ஏ எஸ் (ஓய்வு) பிரதம விருந்தினராக இந்த மாட்சிமை மிக்க கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மதுரையை, அடுத்த வழிகாட்டும் நகரமாக தேர்வு செய்யும் ஆலன் கேரியர் இன்ஸ்டிடியூட் இன் இந்த நடவடிக்கையை வரவேற்ற அவர், இந்த வாய்ப்பை இரு கரங்களாலும் பிடித்துக்கொண்டு, தேசத்தின் பிரதிநிதிகளாகத் தகவமைத்து மேலும் தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து பல திறமையான மாணவர்களுக்கு உத்வேகமான முன்மாதிரியாகத் திகழும் பயணத்தைத் தொடங்க மாணவர் சகோதரத்துவத்தை வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒரு முதன்மையாக வேதியியல் பாடத்தில் ஒரு ஆசிரியரும், தெற்கு வழிகாட்டுதல் திட்டங்களை வழிநடத்துபவரும் தங்கப் பதக்கம் வென்றவருமான ஆலன் தென்னிந்தியா இன் பிராந்திய தலைவர் ஸ்ரீ மகேஷ் யாதவ் கூறும்பொழுது "இது எனக்கு ஒரு உணர்வுபூர்வமான பயணம். 9 ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூருவில் பயிற்சியளித்தல் திட்டங்களைத் தொடங்க பெங்களூருக்கு வந்தேன், 5 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் தமிழ்நாடு செயல்பாடுகளைத் தொடங்கி வழிகாட்டுதலின் பதாகையை ஏந்தினேன். மதுரையின் டெம்பிள் சிட்டி மாணவர் சகோதரத்துவத்தை தங்கள் கனவுகளுடன் ஆலன் க்குள் நுழையவும், உயர்ந்த இலக்கை அடையவும், ஏராளமாக சாதிக்கவும் இன்று உங்கள் முன் நின்று வரவேற்பது எனக்கு அளவற்ற மகிழ்ச்சி அளிக்கிறது. மதுரையைச் சேர்ந்த திறமைசாலிகள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெற்றியின் உச்சத்தை அடைய அவர்களை உருவாக்குவதற்கு எங்களை ஆசீர்வதிக்க மீனாட்சி அம்மனின் ஆசிர்வாதங்களை நான் வேண்டுகிறேன். ஆலன் அதன் ஸ்டூடண்ட் பர்ஸ்ட் அகடமிக்ஸ் பர்ஸ்ட் & அகடமிசியன் பர்ஸ்ட் தத்துவத்தில் உறுதியாக உள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தில் இன்று இங்கு கூடியிருந்த முறையான கல்வித் துறை மற்றும் ஊடகப் பிரதிநிதிகள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."என்றார்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக ஆலன் பள்ளி முதல்வர்கள் மற்றும் மாணவர்களின் ஆதரவை ஆலன் மதுரை துவக்கம் கண்டது.

இந்நிகழ்ச்சியில், சென்டர் ஹெட் திரு சந்தோஷ் சிங் பேசுகையில், "தமிழகத்தைச் சேர்ந்த திறமைசாலிகள் தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளனர், மேலும் ஒரு வழிகாட்டியாக நான் மாணவர்களின் வழிகாட்டுதலின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்துவருகிறேன் மேலும் மாணவர் சகோதரத்துவம் நிர்ணயித்த இலக்குகளை அடைய அவர்களுக்கு உதவுகிறேன். ஆலன் மதுரையில் வெற்றிக்கான ஒரு புதிய தரநிலையை உருவாக்க நான் உறுதியளிக்கிறேன், மேலும் வரும் ஆண்டுகளில் ஆலன் மதுரை, தேசிய மற்றும் சர்வதேச அளவில் முன்னோடியாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள்."என்று கூறினார்.

# ஏஐ திறன்களில் கவனம் செலுத்துகிறது; இந்திய ஜென் இசட் மற்ற தலைமுறைகளைக் காட்டிலும் 73% அதிக நேரம் கற்றலில் செலவிடுகிறது: லிங்டின்

சென்னை, 25 நவம்பர் 2023: உலகின் மிகப்பெரிய தொழில்முறை வலையமைப்பான லிங்டின், தற்போது 1 பில்லியன் உறுப்பினர்கள் தன்னுடைய பலமாக கொண்டுள்ளது , அதன் சமீபத்திய வேலை எதிர்காலம் அறிக்கையை அறிமுகப்படுத்தியது: ஸ்டேட் ஆஃப் ஏஐ @ பணி அறிக்கையாகும் . டிசம்பர் 2022 முதல் செப்டம்பர் 2023 வரை உலகளாவிய ஏஐ உரையாடல்கள் 70% அதிகரித்துள்ளதாகவும், ஏஐ மற்றும் ஏஐ தொடர்பான வேலை வாய்ப்புகளுக்கான விண்ணப்பங்கள் உலகளவில் 11% மற்றும் இந்தியாவில் 5.6% அதிகரித்துள்ளதாகவும் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

ஏஐ திறமையான பணியாளர்களின் தேவை : ஏஐ இன் வளர்ந்து வரும் முக்கியத்துவம் வேலையில் உள்ள தொழில்நுட்பத்தை அதிக அளவில் ஏற்றுக்கொள்ள வழிவகுத்தது, இதன் விளைவாக ஏஐ திறமைக்கான தேவை அதிகரித்துள்ளது. இந்தியாவில் ஏஐ திறன்களைக் கொண்ட தனிநபர்களுக்கான தேவையை முக்கியமாக கருதுபவர்கள் தொழில்சார் சேவைகள், தொழில்நுட்பம், தகவல் மற்றும் ஊடகம் மற்றும் நிதிச் சேவைகள் போன்ற நிறுவனங்கள் ஆகும்.

ஏஐ தொழிலாளர் கற்றலை துரிதப்படுத்துகிறது; இந்தியாவின் ஜென் இசட் தொழிலாளர்கள் வேகமாகப் முன்னேறுகிறார்கள் : உலகெங்கிலும் உள்ள வல்லுநர்கள் ஏற்கனவே ஏஐ திறன்களில் முதலீடு செய்து வருகின்றனர், இந்த காலாண்டில் லிங்க்ட் இன் லேர்னிங்கில் ஏஐ தொடர்பான படிப்புகளைப் பார்க்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 80% அதிகரித்துள்ளது. இந்தியாவில், கற்பவர்களிடையே விருப்பமான திறன்கள் தலைமுறைகளாக வேறுபடுகின்றன: ஜெனரல் இசட், புரோகிராமிங் மொழிகள், கிளவுட் கம்ப்யூட்டிங், தரவு பகுப்பாய்வு, மில்லினியல்கள் மற்றும் ஜெனரல் எக்ஸ் போன்ற டிஜிட்டல் திறன்களைக் கற்கும்போது, தலைமைத்துவம் மற்றும் மேலாண்மை, தனிப்பட்ட செயல்திறன் மற்றும் தனிப்பட்ட மேம்பாடு போன்ற மென்மையான திறன்களில் முதலீடு செய்கின்றனர். இந்தியாவின் ஜெனரல் இசட் வல்லுநர்கள் தங்கள் பழைய சகாக்களை விட ஏஐ திறன்களைப் பெறுவதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர் - ஜென் எக்ஸ் ஐ விட 1.3 மடங்கு அதிகம் மற்றும் பேபி பூமர்களை விட 2.4 மடங்கு அதிகம். உண்மையில், இந்தியாவின் ஜென் இசட் மற்ற தலைமுறைகளுடன் ஒப்பிடும்போது லிங்க்ட்இனில் 73% அதிக நேரத்தை பயன்படுத்துகிறார்கள் .

மக்கள் திறன்களுடன் ஏஐ திறன்களை சமநிலைப்படுத்துவது தொழில் வளர்ச்சிக்கு முக்கியமானது: ஏஐ வழக்கமான பணிகளை மேற்கொள்வதால், தொழில் வல்லுநர்கள் மற்ற வகையான அர்த்தமுள்ள மற்றும் ஆக்கப்பூர்வமான வேலைகளில் கவனம் செலுத்த வாய்ப்பு உள்ளது. புள்ளிவிவரம் கூறுவது ஏபிஏசி முழுவதும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மென்மையான திறன்களை வளர்த்துக் கொண்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் - கடினமான திறன்களுடன் கூடுதலாக - கடினமான திறன்களை மட்டுமே கொண்ட ஊழியர்களை விட 13% வேகமாக பதவி உயர்வு பெறுகிறார்கள். இந்தியாவில், ஏஐ மற்றும் ஏஐ தொடர்பான வேலை வாய்ப்புகள் மூலம் அதிகம் கோரப்படும் மென்மையான திறன்களில் தகவல் தொடர்பு, பகுப்பாய்வு திறன் மற்றும் விற்பனை ஆகியவை அடங்கும்.

வேலையில் ஏஐ இன் ஒருங்கிணைப்பு ஹைபிரிட் வேலைகளுக்கான இடத்தை உருவாக்கும்: ஜெனரேட்டிவ் ஏஐ இன் வளர்ச்சிகள் கலாச்சாரங்கள், புவியியல் மற்றும் தொழில்கள் முழுவதும் உள்ள தடைகளை உடைக்க ஒரு பெரிய வாய்ப்பை வழங்குகிறது. இது கலப்பின வேலை அமைப்புகளுக்கான நோக்கத்தை விரிவுபடுத்தும் - இதுவே இன்றைய பெரும்பாலான தொழிலாளர்களின் எதிர்பார்ப்பு. நிறுவனங்கள் ஏற்கனவே தேவைக்கேற்ப கோரிக்கைக்கு பதிலளித்து வருகின்றன, இந்தியாவில் ஹபிரிட் வேலை வாய்ப்புகள் ஆகஸ்ட் 2022 இல் 13.2% ஆக இருந்தது இப்போது ஆகஸ்ட் 2023 இல் 20.1% ஆக உயர்ந்துள்ளது.

லிங்க்ட் இன் இந்தியாவின் கன்ட்ரி மேனேஜர் அசுதோஷ் குப்தா கூறுகையில் , "2024 ஆம் ஆண்டிற்குள் செல்லும்போது, 90 களில் இணையத்தால் தூண்டப்பட்ட வளர்ச்சியைப் போன்ற ஏஐ தலைமையிலான பணியிட மாற்றத்தை நாங்கள் காண்கிறோம். இந்த நேரத்தில், இது புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, எங்கள் பணி கலாச்சாரத்தில் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மேன்படுத்துவது இனி ஒரு தேர்வல்ல ; அது தலைமைத்துவம் மற்றும் சிக்கலைத் தீர்ப்பது போன்ற முக்கிய மனித திறன்களை வளர்ப்பதில் புதுப்பிக்கப்பட்ட கவனம் செலுத்துவது ஏஐ இன் முழுத் திறனைப் பயன்படுத்த கட்டாயமாகும், . முன்னோக்கிச் செல்லும்போது, வணிகங்களின் வெற்றியானது, கற்றுக்கொள்வதன் மூலம் உள்ளடக்கிய கலாச்சாரத்தை மாற்றியமைத்தல், புதுமைப்படுத்துதல்